## சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல்

**கூடலூர் நகராட்சியில் மே மாதம் (31.05.2021) ஆம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

ஆணையாளர் அவர்களின் 03/2021 மற்றும் 04/2021 ஆகிய இரண்டு மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1146,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் 03/2021 மற்றும் 04/2021 ஆகிய இரண்டு மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1147,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.3**

கூடலூர் நகராட்சியில் உள்ள நவீன ஆடடிமனைக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்குரிய தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியத்தினரிடமிருந்து பெறப்பட்ட AIR மற்றும் WATER க்குரிய CONSENT-ஐ 2021-22 ஆம் ஆண்டிற்கு புதுப்பிக்க மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ,தேனி அவர்களின் கடித எண் FTEN0378/RS/DEE/TNPCB/TEN/2021 நாள்.12.03.2021ன்படி வழங்கப்பட்ட கேட்புத்தொகை ரூ.8,800/-ஐ மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியம், தேனி செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு : –**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.1148,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.4**

கூடலூர் நகராட்சியில் உள்ள நவீன எரிவாயு தகனமேடைக்கு Estapliment க்காக தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியத்தினரிடமிருந்து பெறப்பட்ட AIR மற்றும் WATER க்குரிய CONSENT-ஐ 2021-23 ஆம் ஆண்டிற்கு புதுப்பிக்க மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ,தேனி அவர்களின் கடித எண் FTEN0662/GS/DEE/TNPCB/TEN/2021 நாள்.12.03.2021ன்படி வழங்கப்பட்ட கேட்புத்தொகை ரூ.14,200/-ஐ மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியம், தேனி செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு..

**அலுவலகக் குறிப்பு : –**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.1149,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.5**

இந்நகராட்சிக்கு சொந்தமான காந்திஜி பூங்கா கழிப்பறை கட்டணம் குத்தகைக்கு திரு.ப.சிவனேசன், குத்தகைதாரர் என்பவர் பொதுஏலத்தின் மூலம் எடுத்த பின்னர், 2019–2020 மற்றும் 2020–2021ம் ஆண்டின் நிலுவைத்தொகையினை செலுத்தாமலும், தன்னிச்சையாக ஏல உரிமத்தினை கைவிட்டபடியாலும், அன்னார் மீது நீதிமன்ற வழக்கு தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.30000/–க்கு (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1150,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.6**

இந்நகராட்சிக்கு சொந்தான பேருந்து நிலையம் நுழைவு கட்டணத்தினை குத்தகைக்கு எடுத்த குத்தகைதாரர் திரு.கு.சூர்யபிரகாஷ் பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக தொடர்ந்து நடத்திட இயலாது என்பதால் குத்தகை உரிமத்தினை 15.04.2021 உடன் இரத்து செய்யுமாறு தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து (மறு ஏலம் கோரும் வரை) நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு துறைரீதியாக வசூல் பணி மேற்கொள்ளவும், திரு.கு.சூர்யபிரகாஷ் என்பவரால் நடத்தி வரப்பெற்ற பேருந்து நிலையம் நுழைவு கட்டண வசூல் செய்யும் குத்தகை உரிமத்தினை 15.04.2021 முதல் ரத்து செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு,

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தேர்தல் பணிக்காலமாக இருந்து வருவதால் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1151,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.7**

இந்நகராட்சி அனைத்துப் பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும் பதிவேடுகள்,படிவங்கள் மற்றும் கணினிக்கு தேவைப்படும் மென்பொருட்கள் 2021-2022 ஆம் ஆண்டிற்கு வாங்குவதற்கும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/-க்கு(ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு,

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1152,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.8**

இந்நகராட்சி செயல்படுத்தப்படும் அம்மா உணவகத்தில் பணிபுரியும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு இது நாள் வரையிலும் தினக்கூலியாக ரூ.250/- வீதம் வழங்கப்பட்டது. தற்போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசானை எண்(4D)No.2 நாள்.26.02.2021ன்படி அம்மா உணவகத்தில் பணிபுரியும் மகளிர் குழு உறுப்பினர்களுக்கு தினக்கூலியாக ரூ.250/-லிருந்து ரூ.325/-ஆக உயர்த்தி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் தகவலுக்கும், பார்லைக்கும்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவின தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1153,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.9**

கூடலூார் நகராட்சி அலுவலக பயன்பாட்டிலுள்ள ஈப்பு வாகனம் எண்.TN-60 Y-7332ற்கு ஆயில் சர்வீஸ் புதிய டயர்கள்,கிரிஸ் பேக்கிங் சஸ்பென்சர் பழுதுகள் ஆயுள் காப்பீட்டு செலுத்துதல் மற்றும் சிறு பழுதுகள் நீக்கம் போன்ற பணிகள் மேற்கொள்ள 2021-2022 ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1154,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.10

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிலுள்ள ஈப்பு வாகனம் எண்.TN-60 R-6378ற்கு ஆயில் சர்வீஸ் புதிய டயர்கள்,கிரிஸ் பேக்கிங் சஸ்பென்சர் பழுதுகள் ஆயுள் காப்பீட்டு செலுத்துதல் மற்றும் சிறு பழுதுகள் நீக்கம் போன்ற பணிகள் மேற்கொள்ள 2021-2022 ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இந்நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1155,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.11

இந்நகராட்சியில் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு **39 DBC** களப்பணியாளர்கள் முற்றிலும் தற்காலிகமாக **Out Sourcing முறையில்** தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள தினக்கூலியின் அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க கொசுப்புழு ஒழிப்பு பணிகளை மேற்கொண்ட வருகிறார்கள். இப்பணியினை ஒப்பந்த அடிப்படையில் **CLEAN CARE SERVICE CENTER** மதுரை நிறுவனத்தின் மூலம் தற்சமயம் செயல்பட்டு வருகிறது. இப்ணியானது வருகின்ற 2021 மார்ச் இறுதியில் ஒப்பந்தம் முடிவடையும் நிலையில் உள்ளதால் இப்பணியினை தொடர்ந்து தொய்வில்லாமல் நடைபெற்றால் தான் கொசு புழுக்களை ஒழித்து டெங்கு காய்ச்சல் பரவாமல் தடக்க முடியம். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/J1, நாள்.17.09.2018, மற்றும் தேனி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ந.க.எண்.14770/202/இ2, நாள்.07.09.2020 உத்திரவில் குறிப்பட்டுள்ள வரிசை எண்.32 இல் நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு தினக்கூலியாக ரூ.249/— நிர்ணயிக்கப்பட்டுள்ள கூலியின்படி ஏற்கனவே பணியில் உள்ள **37 DBC** களப்பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ளப்பட்டது. மேற்காணும் களப்பணியாளர்களுக்கு **ஜூன்/2021** முதல் கால அவகாசம் முடிவடைவதால் **ஜூலை/2021 முதல் மார்ச்/2022** முடிய ஒன்பது மாதங்களுக்கு **39 DBC** களப்பணியாளர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு உள்ளபடி செலவு விவரம்:

**<u>கீழ்க்கண்டவாறு</u> :**

1) தேவைப்படும் களப்பணியாளர்கள் எண்ணிக்கை –39

2) தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவின்படி தினக்கூலியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு – ரூ.249/—

3) நபர் ஒன்றுக்கு 39 DBC களப்பணியாளர்களின் 39X249 தினக்கூலி தொகை ரூ.9711 /—

4) ஜூலை/2021 முதல் மார்ச்/2022 முடிய ஒன்பது மாதங்களுக்கு கூலியாக 9711X274ரூ.26,60,814/—

5) களப்பணியாளர் ஒருவருக்கு பாதுகாப்பு உபகரணம் ரூ.2000/—வீதம் 39 களப்பணியாளர்களுக்கு = ரூ.78,000/—

6) தொழிலாளர் சேம நல நிதி (13.1 5%) = ரூ3,49,897/—

7) தொழிலாளர் ESI (4.75%) =ரூ.1,26,388/—

8) தொழிலாளர் LIC (50* 39* 9) =ரூ.17,550/—

9) நிர்வாக செலவு 5% =ரூ.1,33,040/—

———————————

**மொத்தம்** =ரூ.33,65,689/—

கொசு ஒழிப்பு பணிக்காக **39 DBC** பணியாளர்களுக்கு **(ஜூலை/2021 முதல் மார்ச்/2022 முடிய )** ஒன்பது மாதங்களுக்கு உண்டாகும் உத்தேச செலவீனம் தொகை ரூ.35,00,000/– க்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி டெங்கு களப்பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.120/2021/எச்1)**

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளின் அவசர அவசியம் கருதியும் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் பணிகளை மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1156,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.12**

கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் அறை மற்றும் கனினி அறை ஆகிய இரண்டு அறைகளில் உள்ள குளிர்சாதன இயந்திரங்கள் மற்றும் ஆணையாளர் அறை,கணக்கர் அறை மற்றும் கனினி அறை ஆகிய அறைகளில் உள்ள அலுமினிய கண்ணாடி கதவுகள் ஆகியற்றினை பழுது நீக்கம் செய்திட உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.15000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு : –**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.1157,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.13**

கூடலூர் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஒளிநகல் இயந்திரங்கள் MP 2501L மற்றும் MP 1813L ஆகியவற்றில் உள்ள பழுதுகளை சரிசெய்து சர்வீஸ் செய்வதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.4500/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு : –**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1158,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.14**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு நோய் பரவாமல் தடுக்கவும், மழைக்காலம் துவங்கி விட்டதால் கொசு உற்பத்தி அதிகமாகி நோய் பரவும் சூழ்நிலை உள்ளதால் கீழ்கண்ட மருந்துகள் மற்றும் இயந்திரங்கள் வாங்க உத்தேச செலவினம் தொகை ரூ. 4,20,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு. (ந.க.எண்.220/2020/எச்1)

| வ. எண் | பொருள் | அளவு | உத்தேசசெலவினம் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | கொசுபுகை மருந்துஅடிக்கும் இயந்திரம் (INDOOR FOGGING MACHINE) | ரூ.2300/– வீதம் 5 எண்ணம் | 1,15,000/– |
| 2 | Pyrethrum 2% Extaract | ரூ.1280/– வீதம் 100 லிட்டர் | 1,28,000/– |
| 3 | Mini Fogging Gas Cylinder | ரூ.350/– வீதம் 500 எண்ணம் | 1, 75,000/– |

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1159,அனுமதிக்கப்பட்டது.**